1974 ஏப்ரல் 11]

திரு. வி. வெங்கா : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் இயங்கி வரும் நடுநிலைப் பள்ளிகளில் சில தமிழ் ஆசிரியர்களையும், உடற்பயிற்சி ஆசிரியர்களையும் நியமித்துக்கொள்ளலாம் என்ற விதிமுறை இருக்கிறது. அதற்குட்பட்டு பள்ளிகளில், இன்னின்ன பள்ளிகளில் காலியிருக்கிறது, அவைகளை நியமித்துக் கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று டி.இ.ஓ.விடம் கேட்கின்றபோது, அரசிடமிருந்து உத்தரவு பெறவேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த நடைமுறையைத் திருத்தி, டி.இ.ஓ. அவர்களே அங்கே உத்தரவு வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதில் இருக்கிற சிக்கல் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால், நிலைமைகளை அறிந்து சொல்லலாம்.

Radiation Medicine Centre

* 306 *Q.*—THIRU V. VENGA (on behalf of THIRU K. ARIVAZHAGAN) : Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal under consideration to start a Radiation Medicine Centre in the State?

கதிரியக்க முறை மருத்துவ நிலையம்.

திரு. வி. வெங்கா (திரு. க. அறிவழகன் சார்பில்) : மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

மாநிலத்தில் கதிரியக்க முறை மருத்துவ நிலையம் ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

Loss of Eye-sight due to lack of nutrition

* 307 *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that children have lost their eye-sight due to lack of nutrition in Tamil Nadu; and

(*b*) if so, the total number of children affected?

[1974 ஏப்ரல் 11

சத்துணவு இன்மையால் கண்பார்வை இழப்பு

திரு. எல். பலராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாட்டில் சத்துணவு இல்லாமல் குழந்தைகள் கண் பார்வை இழந்தனர் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், பாதிக்கப்பட்ட குழந்கைளின் எண்ணிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) சத்துணவு குறைந்ததால் கண்பார்வை இழக்கலாம் என்பது உண்மைதான்.

(இ) கணக்கு எடுப்பது சுலபமல்ல. தமிழ்நாட்டின் அவ்வளவு குழந்தை களேயும் பார்வையிட்டு பரிசோதித்து கணக்கெடுக்க காலம் செல்லும். மிகுந்த பொருட்செலவும் ஏற்படும். ஆனல், மதுரையில் மாத்திரம் எடுத்த கணக்கு பின்வருமாறு :—

மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனே, கண் சிகிச்சைப் பிரிவில் 1971 ஜுன் திங்களிலிருந்து 1973 செப்டம்பர் வரை கண்டறியப்பட்ட வைட்டமின் ஏ, சத்துணவு ஆகியவை—

குறைந்துள்ள நோயாளிகளின் எண்ணிக்கை ..	4614
சத்துணவு குறைந்ததன் காரணமாக கண் பார்வை இழந்தவர்கள்	350
கண் சிகிச்சைப் பிரிவில் அகநோயாளிகளாக சிகிச்சை அளிக்கப்பட்டவர்கள்	325

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இது போன்ற இளமையான குழந்தைகள் கண் பார்வை இழப்பதைத் தவிர்க்க, பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளுக்காவது வைட்டமின் மாத்திரைகளேக் கொடுக்க அரசு பரிசீலிக் குமா ? அதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் போன்ற மருத்துவமனைகளுக்குக் கொண்டுவரப்படுகின்ற குழந்தை களுக்கு, அவர்களுடைய உடல் வலிவு குறைவு காரணமாக, சத்துணவு குறைவு காரணமாக பார்வை பாதிக்கப்படும் என்று தெரியுமானல், உரிய மாத்திரைகள் தர இடமிருக்கிறது. இன்னும் சொல்லப் போனல், குழந்தை பிறந்தவுடன் தாய்க்கே கூட, இந்த வைட்டமின் 'ஏ' சத்து உள்ள மருந்துகள் தருவதன் மூலமாக, குழந்தைகள் பாதிக்கப்படாமலிருக்க வழி காணமுடிகிறது. பொது வாக நீண்ட காலமாக குழந்தைகளை வளர்ப்பதில், அவர்களுக்கு கீரை, வேர்க்

1974 ஏப்ரல் 11]

கடலை உருண்டை, பருப்பு முதலிய சத்துணவு தருவதை மறந்துவிடுவார்களே யானால், அந்தக் குழந்தைகள் 7, 10 வயதில் பார்வை இழந்து பாதிக்கப்படு கின்றன. எனவே பெற்றோருக்கு அறிவூட்டுவதன் மூலமாக, பொறுப் புணர்ச்சியை ஊட்டுவதன் மூலமாகத் தான் இந்தப் பெரிய பாதகத்தைத் தவிர்ப்பது எளிதாகும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: *தலைவரவர்களே, இந்த மாதிரி இளங் குழந்தைகளுக்குச் சத்துணவு குறைவாக இருக்கிறது என்ற காரணத்தின் அடிப்படையில், அறநிலையத் துறையில் கோவில்களில் குழந்தைகளுக்குப் பால் வழங்குகிற திட்டத்தை அறநிலைய அமைச்சர் அவர்கள் துவக்கினார்கள். அம் மாதிரி எத்தனை ஆலயங்களில், எவ்வளவு குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?*

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: *தலைவரவர்களே, அது நல்ல காரியம் தான். நான் அறநிலைய அமைச்சரைக் கேட்டு அறிந்துதான் தங்களுக்கு பதிலளிக்க வேண்டும்.*

THIRU A. R. DAMODARAN: Sir, since milk may not be available and as the Hon. Minister mentioned that groundnut contains Vitamin 'A', may he suggest to the Hon. the Minister for Religious Endowments that groundnut balls at least be distributed to young children?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: *தலைவரவர்களே, பஜனை கோவிலில் எல்லாம் ஒரு காலத்தில் சுண்டைக்கடலை வழங்குவதை பழக்கமாக வைத்திருந் தார்கள். பயறு, சுண்டைக்கடலை, வேறு சில வெல்ல உருண்டைகளைக் கலந்து வழங்குகின்ற பழக்கம் உண்டு. பொரி உருண்டை என்று ஏழைகளுக்கு மிகக் குறைந்த விலையில் கிடைக்கிற உருண்டை உண்டு. சத்து மாவு என்று ஏழைத் தாய்மார்கள் குழந்தைகளுக்காகத் தயாரித்து வைத்து மாலை நேரத்தில் தின் பண்டத்திற்குப் பதிலாக அதை வழங்குவார்கள். இப்படி பல நல்ல பழக்கங்கள் இருந்தன. அவையெல்லாம் நம்மைவிட்டு விலகிப் போய், நம்மை கண்பார்வை இழக்கச் செய்து வருகின்றன என்பதைத் தான் இந்த நாட்டி லுள்ளவர்கள் உணர வேண்டும்.*

திரு. எம். சங்கரலிங்கம்: *தலைவரவர்களே, சென்னை நகரில் ஆரம்பப் பள்ளிகளில் மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்வது ஆரம்பிக்கப் பட்டது. அந்தப் பரிசோதனையில் முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்பு படிக்கின்ற குழந்தைகள் எவ்வளவு பேருக்குக் கண்பார்வை மங்கியிருக்கிறது*

என்று ஏதாவது விவரங்கள் கிடைக்கப்பெற்றதா? சிறு குழந்தைகளுக்குக் கொடுக்கின்ற மதிய உணவில் வைட்டமின் 'ஏ' கலந்து கொடுக்கிற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு நிலையத்திற்கு 50 பேருக்கு, கருவுற்ற தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் உணவு வழங்கப்படுகிறது. அதைப் போல துணை நிலையங்களிலும் வழங்கப்படுகிறது. பள்ளிக்கூடத்திலும் மதிய உணவுத் திட்டத்தின் பெயரால், சத்துணவு எந்த வகையில் அமைய வேண்டுமோ அந்த வகையில் கவனித்து வழங்கப்படுகிறது. சென்னை நகரில் குழந்தைகளுக்காக, பள்ளி செல்லுகின்ற சிறுவர்களுக்காக நடத்தப்படுகின்ற ஆய்வு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலிருந்து புள்ளிவிவரங்கள் தனியாகத் தரக்கூடிய வாய்ப்பு இப்போது எனக்கில்லை. ஆய்வில் குழந்தைகளின் கண் பார்வை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று தெரியுமானால், பாதிக்கப்பட்டவர்களுக்கு கண் மருத்துவ மனையில் தகுந்த சிகிச்சை பெற வழி செய்யப் படுகிறது. அந்தக் குழந்தைகளுக்கு தகுந்த சத்துணவு தர பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. அந்தப் பணி முழுவதும் நிறைவேறிவிட்டது என்று கருத முடியாது. ஓரளவுக்கு பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. வி. வெங்கா: தலைவரவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு வரக்கூடிய குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் சத்துணவு கொடுக்கப் படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களின் அறியாமையின் காரணமாக, பெரும்பாலான தாய்மார்கள் சுகாதார நிலையத்திற்குக் குழந்தைகளைக் கொண்டுவருவதில்லை. எனவே ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருக்கின்ற டாக்டர்கள் வாரத்திற்கு ஒரு கிராமத்திற்குச் சென்று, குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் சத்துணவு, போலியோ இன்ஜெக்ஷன் வழங்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்த சத்துணவு வழங்கும் திட்டத்தை டாக்டர் மேற்பார்வையில்தான் செயலாற்ற முடியும். டாக்டர்களுக்கு உள்ள பல்வேறு பணிகளுக்கிடையில் ஒவ்வொரு துணை நிலையத்திலும் வழங்கப்படுகிற முறை இருப்பதன் காரணமாக, எப்படியோ 30 பேருக்கு, 25 பேருக்கு வழங்கியிருக்கிறார்களா என்று பார்க்க முடியுமே தவிர, நேரடியாக டாக்டர்களே நிறைவேற்றுவது என்பது, ஏறத்தாழ ஒரு லட்சம் மக்கள், 80 ஆயிரம் மக்கள் உள்ள ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள டாக்டர்களால் செயல்படக் கூடியதல்ல. ஆனால் குழந்தைகளுக்குப் போடவேண்டிய ஊசிகளைப் பொறுத்த வரையில், பிறந்துவிட்ட ஒவ்வொரு

குழந்தையையும் மருத்துவ மனைக்கு மாதத்தில் ஒரு நாள் வரச்செய்து ஊசி போடலாம். அதற்குக் கூட பெற்றோர்கள் ஒத்துழைத்தால் தான் நிறைவேறுமே தவிர, பெற்றோர்களுக்கு ஒத்துழைக்கின்ற கருத்து உருவாகாமல் இருக்குமேயானால், டாக்டர்களால் மட்டும், இந்த நல்ல காரியங்களை நிறைவேற்ற முடியாது.

(பிற்பகல் 4-20)

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த அலுவலர்கள்—கிராம சேவக்குகள் போன்றவர்கள் கிராம மக்களுடன், பெற்றோர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குக் குழந்தைகளை எடுத்துச் செல்லும்படியாக பெற்றோர்களைத் தூண்டிவிடும் பணியை அவர்கள் மற்ற பணிகளுடன் சேர்த்துச் செய்ய வேண்டுமென்று, உள்ளாட்சித் துறை மூலமாக அரசாங்கம் உத்தரவிடுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இப்போதேகூட ஒன்றியத்திலே 'Health Inspector' என்ற பெயரிலும், 'Family Planning Extension Educator' என்ற பெயரிலும் பல பேர் பணியாற்றுகிறார்கள். 'Health Visitors' 'Maternity Assistant' என்ற பெயரிலும் பல பேர் பணியாற்றுகிறார்கள். அவர்களுடைய பொறுப்பு, இந்தக் குழந்தைகளுடைய நலத்தைக் கவனிப்பதற்கு பெற்றோர்களிடம் சொல்ல வேண்டியதைச் சொல்லி, அந்தக் குழந்தைகள் பெற வேண்டிய வசதிகளைப் பெற்றுக்கொள்ளச் செய்யவும், வேறு வகையிலே பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்குமானால், இப்படிப்பட்ட சத்துணவைப் பற்றி எடுத்துச் சொல்வதுமாகும். ஆனால் எதிர்காலத்தில் குழந்தைகளைப் பெற்றவர்கள் யாராக இருந்தாலும், அந்தக் குழந்தைகளுக்கு இந்த அளவாவது சத்துணவு தந்து அவைகள் வளர்க்கப்பட வேண்டுமென்பதை அறிவுறுத்த 'Multi-purpose worker' என்ற பெயரிலே 'Nutrition, Health, Medicine Family Planning' ஆகிய துறைகளில் பணியாற்றத்தக்க விதத்தில், அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டுமென்ற ஒரு கருத்து இருக்கிறது. இப்போது கூட அவர்கள் நினைத்தால் அவர்களுக்கு ஆர்வம் இருக்குமானால், நல்ல முறையில் நிறைவேற்றலாம். ஆனால் பொதுவாக என்ன காரணமோ தெரியவில்லை, கிராம மக்கள் மதிக்கத் தக்க வகையில் அவர்கள் நடந்து, அவர்களுக்கு அறிவுரை சொல்லும் வகையில் ஒரு தகுதியை, ஒரு சூழ்நிலையை அவர்களுள் பலர் தேடிக்கொள்ளவில்லை.